6 .அறிக்கை அளித்தல்.

மின்சார விநியோகத்தில் கட்டுப்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சட்டப் பேரவை விதி 106 இன் கீழ் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ச, இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை விதி 106-ன் கீழ் கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்கிறேன்.

கடந்த சில நாட்களாக மின் விநியோகத்தில் பல்வேறு இடங்களில் தடை ஏற்பட்டுள்ளது எனவும், ஒரே சீரான முறையில் மின்விநியோகம் இல்லாததினால் விவசாய மின் இணைப்புகளில் உள்ள பம்பு செட்டுகள் பாதிக்கப்பட்டன எனவும், பல்வேறு பகுதி விவசாய சங்கப் பிரதிநிதிகளிடமிருந்தும் சட்டப் பேரவை மேலவை உறுப்பினர்களிடமிருந்தும் முறையீடுகள் வந்துள்ளன.

மின் சக்தி ஒரு நாளைக்கு சுமார் 31 மில்லியன் யூனிட்டுகள் தேவைப்படுகின்றன. அனல் மின் நிலையங்களிலிருந்தும், நீர் மின் நிலையங்களிலிருந்தும், கேரள அரசிடமிருந்தும் நமக்கு மொத்தமாக 26.65 மில்லியன் யூனிட்டுகள் தான் கிடைக்கின்றன. எனவே பற்றாக்குறை நாளொன்றுக்கு சுமார் 4 35 மில்லியன் யூனிட்டுகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே சீரான மின் விநியோகம் கிராமப்புறங்களுக்கும் விவசாய மின் இணைப்புகளுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கான மின் விநியோகத்தில் கீழ்க்காணும் கட்டுப்பாடுகளை விதிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

1. சிமென்ட் உற்பத்தி ஆலைகளுக்கு உச்சத் தேவையிலும், மின் சக்தியிலும் 15 சதவிகித மின்வெட்டு அமுலாக்கப்படும்.

2. அத்தியாவசியமான பணிகளுக்கும் உச்சத் தேவையிலும் மின்சக்தியிலும் 15 சதவிகித வெட்டு அமுல்படுத்தப்படும். மாவு மில்களுக்கு விலக்களிக்கப்படுகின்றன.

3. பொதுப்பணிகளுக்கான உயர் அழுத்த மின் இணைப்புகளுக்கும் உச்சத் தேவையிலும் மின் சக்தியிலும் 30 சதவிகித மின் வெட்டு அமுல்படுத்தப்படும்.

1981 மார்ச் 7]

4. மூன்று ஷிப்டுகள் வேலை செய்யும் உயர் அழுத்தத் தொடரா முறைத் தொழிற்சாலைகளுக்கு உச்சத் தேவையில் 50 சத விகிதம் மின் வெட்டு அமுல் படுத்தப்படும். பயன்படுத்தும் மின்சக்தியில் தற்போது நடைமுறையிலுள்ள 30 சதவிகித வெட்டில் எவ்வித மாற்றமும் இல்லை.

5. அரசு ஆணைகளின் மூலம் அவ்வப்போது விலக்களிக்கப் பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கும் உச்சத் தேவையிலும் மின் சக்தியிலும் 15 சதவிகித மின் வெட்டு அமுல்படுத்தப்படும். அரிசி ஆலைகள் உபரி உற்பத்தியை அரசுக்குத் தருமானால் இதிலிருந்து விலக்களிக்க அரசு முன்வரும்.

6. புதிய உயர் அழுத்த மின் இணைப்புகளோ ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகளுக்கு கூடுதல் சுமையோ நிலைமைகள் சீர்படும் வரை வழங்கப்பட மாட்டாது.

7. அலங்கார விளக்குகளோ, ஆடம்பர விளக்குகளோ, பெயர்ப்பலகைகளில் விளக்குகளோ பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படும்.

மேற் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளினால் மின் சக்தியின் உபயோகம் ஓரளவிற்குக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற் குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடுகளை அமுல் படுத்துவதன் மூலம் குறையக்கூடிய மின் சக்தியைக் கொண்டும், மற்ற நடவடிக்கைகளின் மூலம் கிராமப்புறங்களில் கீழ்க்காணும் வகையில் சீரான மின் விநியோகத்திற்கான ஏற்பாடுகள் அமுலாக்கப்படும்.

முதல் பிரிவு : காலை 6—00 மணி முதல் நண்பகல் 12—00 மணி வரை (6 மணி நேரம்)

இரண்டாவது பிரிவு : நண்பகல் 12 மணி முதல் மாலை 6 மணிவரை (6 மணி நேரம்)

மூன்றாவது பிரிவு: இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை (8 மணி நேரம்)

பிற்பகல் 1—50

இம்மூன்று பிரிவுகளுக்கும் 10 நாட்களுக்கு ஒரு முறை சுழல் முறையில் மாற்றி மாற்றி மின்சக்தி வழங்கப்படும்.

இந்தக் கட்டுப்பாடுகள் 9—3—81-ம் நாளிலிருந்து அமுலுக்கு வரும்.